TNRM010019442024

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
இராமநாதபுரம்.

2024ம் ஆண்டு ஜூலை மாதம் 30–ம் நாள் செவ்வாய்கிழமை
மோ.வா.வி.கோ.தீ.அசல் மனு எண்.82/2024
**CNR No: TNRM01-001944-2024**
****

சிவரஞ்சனி ..... **மனுதார்**

**/எதிர்/**

1) அடைக்கலம்
2) ஜெனரல் மேனேஜர், HDFC, ERGO ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், மதுரை–625 009.
3) சாலியா
4) அஜிஸ்ஜெண்ட் லீகல் மேனேஜர், சோழமண்டலம் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., மதுரை–16.

.... **எதிர்மனுதாரர்கள்**

இம்மனுவானது 30.07.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G. தமிழ்வேந்தன் B.E.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.A. தர்மராஜ் M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 3 வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.T.விஜயகார்த்திக் B.A.,L.L.B., அவர்கள் ஆஜராகியும் 4 வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.C. பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரருக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப் படுத்தப்பட்டார்கள். மனுதாரர் அழைக்கப்படும் ஆஜரில்லாத நிலையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

TNRM010019442024

இம்மனு மோட்டார் வாகன விபத்துச் சட்டம் பிரிவுகள் 140, 141, 142, 163(பி), 166 மற்றும் 182(ஏ) 1988ன் படியும், உடன் இணைந்த மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாய விதிகள் திருத்தப்பட்ட சட்டம் 54/1994 விதி 3(1)ன் படியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மோட்டார் வாகன விபத்தில் இறந்தவர் நம்புராஜன். அவரின் வாரிசான மனுதாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.30,00,000/- இழப்பீடாக எதிர்மனுதாரர்களை கொடுக்க உத்தரவிட்டும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாக்கல் தேதியிலிருந்து நீதிமன்றத்தில் இழப்பீடு பணம் செலுத்தும் தேதி வரை 12% வட்டியுடனும் இம்மனுவிற்கான செலவுத்தொகை மற்றும் வழக்கறிஞர் கட்டணத்தையும் சேர்த்து எதிர்மனுதாரர்கள் கொடுக்கும்படி உத்தரவு கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரை அழைத்தும் ஆஜர் இல்லை. மனுதாரர்தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் செய்யப்படவில்லை. எனவே இம்மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2024ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

<u>உபயதரப்பு சாட்சிய சான்றாவணங்கள் இல்லை</u>.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

TNRM010019442024

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,

இராமநாதபுரம்.

M.C.O.P.No.82/2024

சீரானஉத்தரவு/ வரைவு உத்தரவு

நாள்: 30.07.2024.